Akhbar Harian Tamil Nesan

தமிழ் நேசன்

TAMIL NESAN DAILY

வெள்ளி 22-7-2011



# சிங்கை வீரமாகாளியம்மன் கோவிலில் தானியங்கி இயந்திரம்!

## பக்தர்களிடையே அமோக வரவேற்பு



தானியங்கி இயந்திரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து விளக்கம் அளிக்கிறார், இயந்திரத்தை தயாரித்து அறிமுகப்படுத்திய ஸ்ரீ.

சிங்கப்பூர், ஜூலை 22- (ஜி. நாகேஸ்வரி)

சிங்கப்பூர் வீரமாகாளியம்மன் கோயிலில் தானியங்கி இயந்திரத்தை பக்தர்கள் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மற்ற கோவில்களிலும் இது போன்ற இயந்திரத்தைப் பயன்படுத்த உத்தேசித்து இருப்பதாக இயந்திரத்தை தயாரித்து அறிமுகப்படுத்திய ஸ்ரீ என்பவர் தெரிவித்தார்.

இந்த தானியங்கி இயந்திர பயன்பாடு பக்தர்களின் நேர விரயத்தை முற்றிலும் குறைக்கிறது.

கோயில் அர்ச்சனை சீட்டு உட்பட அனைத்து பூஜை பொருட்களின் விற்பனை நிலவரத்தையும் கோயில் நிர்வாகம் உடனுக்குடன் தெரிந்து கொள்ள எளிதாகவும், வசதியாகவும் இருக்கிறது. மேலும் உலகம் முழுவதிலுமுள்ள கோவில்களில் இத்தகைய தானியங்கி இயந்திர பயன்பாடு அறிமுகப்படுத்தப்பட விருப்பதாக ஸ்ரீ கூறினார்.

சிங்கப்பூர் சிராங்கூன் சாலையில் உள்ள வீரமாகாளியம்மன் கோவிலில் பக்தர்களுக்குத் தேவையான அர்ச்சனை சீட்டுகளையும், இதர பொருட் களையும் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள தானியங்கி இயந்திரத் தில் சிறப்பு அட்டையைப் பயன்படுத்தி பக்தர்கள் வாங்கிச் செல்கின்றனர். கோவிலில் இதுபோன்ற இயந்திரம் பயன்படுத்தப்படுவது இதுவே சிங்கப்பூரில் முதன் முறையாகும்.

பக்தர்கள் நீண்ட வரிசையில் நீண்ட நேரம் நிற்பதை குறைக்கவே (ஸ்ரீ வி.எம்.டி.) என்ற இந்த வகை இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது. ஐந்து வெள்ளி வைப்புத் தொகையை செலுத்தி இந்த இயந் திரத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையிலான சிறப்பு அட்டையை கோயில் வளாகத்திலுள்ள அலுவலக கவுண்டரில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் அட்டையில் பண மதிப்பை ஏற்றிக் கொள்ளலாம். இது பற்றி கோவில் நிர்வாகக் குழு உறுப்பினர் செல்வ குமார் தெரிவித்தாவது:

தானியங்கி இயந்திரத்தைப் பயன் படுத்தும் பக்தர்கள், அலுவலகத்திற்கு செல்லாமல் ரசீதை பெற்றுக் கொண்டு நேராக சன்னிதிக்குச் செல்லலாம்.

இப்போதைய காலகட்டத்தில் 90 சதவீதத்தினர் கணினியை எளிய முறையில் கையாளுகின்றனர்.

இந்த வகையில் இங்கு இடம்பெற்றுள்ள இயந்திரத்தை பக்தர்கள் பயன்படுத்துவதால் நேரம் வெகுவாகக் குறைகிறது. பால், நெய், விளக்கு, தேங்காய் போன்ற பூஜைப் பொருட்கள் யாவையும் இந்த இயந்திரத்தின் மூலம் வாங்கிப்



அர்ச்சனைச் சீட்டு, தேங்காய், பழம், மற்றும் பூஜைப் பொருட்களை தானியங்கி இயந்திரத்தில் செலக்ட் செய்த ஒரு புதுமணத் தம்பதி.

பயன்பெறலாம் என்று கூறிய குமார், மேலும் பக்தர்கள் இயந்திரத்தை அவசரமின்றி நிதானமாகப் பயன்படுத்தி கால விரயத்தை தவிர்த்து சிறப்பான சுவாமி தரிசனம் செய்யலாம் என்றார்.